# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு!



மயிலாடுதுறை, அக். 19 - மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (19.10.2024 - சனிக்கிழமை) மாலை 4.00மணிக்கு மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்.** வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி,

2026 சட்ட மன்ற தேர்தல் குறித்து.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக்கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்தில்தொகுதி பார்வையாளரும்,திமுக இளைஞரணி மாநில துணை செயலாளருமான அப்துல் மாலிக் கலந்துகொண்டு வாக்காளர்கள் பெயர் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.உடன் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் **'என் உயிரினும் மேலான..!'** பேச்சுப் போட்டி மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது.

மாநில அளவிலான இறுதிப்போட்டி 19.10.2024 அன்றும், பரிசளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 20.10.2024 அன்றும் சென்னையில் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம்.

தமிழ்நாடு முழுவதும் கனமழை பெய்துள்ள சூழலில், போட்டியாளர்களின் நலன் கருதி, இரு நிகழ்ச்சிகளையும் ஒத்தி வைத்துள்ளோம். மாநில அளவிலான இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அன்பகம்,**
சென்னை – 18.
நாள் : 17–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## ஆகாயத் தாமரை அகற்றம்: ஒரே நாளில் கோரிக்கையை நிறைவேற்றிய

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

## கீழ்கட்டளை - எஸ்.கொளத்தூர் பகுதி மக்கள் தெரிவித்தனர்!

**சென்னை, அக் 19– தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தங்கள் கோரிக்கையை உடனடியாக ஒரே நாளில் செயல்படுத்தியதற்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.10.2024 நள்ளிரவு தொடங்கி 15.10.2024 அதிகாலை 3.00 மணி வரை சென்னை மற்றும் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் அன்று பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட மழை நீர் வெளியேற்றும் பணிகளில் தூய்மை பணியாளர்கள், இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு சீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதை உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், கீழ்கட்டளை ஏரியில் இருந்து வரும் உபரி நீரானது பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிக்கு கால்வாய் மூலம் வந்தடைகிறது. இங்கிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வழியாக நீரானது கடலை சென்றடையும். பள்ளிக்கரணை பகுதியில் கீழ்கட்டளை ஏரியிலிருந்து உபரி நீர் நாராயணபுரம் ஏரியை வந்தடைவதற்காக உள்ள கால்வாயின் மீது அம்பேத்கர் சாலை பாலம் அமைந்துள்ளது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.10.2024 அன்று மதியம் பள்ளிக்கரணை எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பகுதி கால்வாயில் ஆகாயத்தாமரை முற்றிலும் அகற்றப்பட்டு, நீர் சீராக செல்வதை பார்வையிட்டார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.10.2024 அன்று மாலை பள்ளிக்கரணை எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பாலத்தின் இருபுறங்களிலும் நீர் செல்லும் வேகம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

துணை முதலமைச்சர் அவர்கள் 15.10.2024 அன்று அதிகாலை ஒரு மணியளவில் எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பாலத்தின் இருபுறங்களிலும் நீர் செல்லும் வேகம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பொதுமக்கள் கால்வாயில் ஆகாயத் தாமரை படர்ந்து நீரின் வேகத்தை குறைப்பதாகவும், முற்றிலும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் கோரிக்கை தெரிவித்தனர்.

அவர்களது கோரிக்கையை துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் தெரிவித்து உடனடியாக முழுமையாக ஆகாயத்தாமரையை அகற்றும் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பணிகளை முடுக்கி விட்டார்.

இதனையடுத்து நீர்வளத்துறை அலுவலர்கள் மிதவை அமைப்புடன் கூடிய பொக்லைன் இயந்திரங்கள் மூலம் கால்வாயில் ஆகாயத்தாமரையை அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

அப்பகுதியில் 15.10.2024 அன்று மாலை மீண்டும் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள் மீதமுள்ள ஆகாயத்தாமரை அகற்றும் பணிகளை நாளைக்குள் முடிக்க அறிவுறுத்தினார்.

மறுநாள் 16.10.2024 அன்று மதியம் துணை முதலமைச்சர் அவர்கள் 100 மீட்டருக்கும் மேற்பட்ட மீதமுள்ள பகுதிகளில் ஆகாயத்தாமரை முற்றிலும் அகற்றப்பட்டு நீர் சீராக செல்வதை பார்வையிட்டார். அப்போது கோரிக்கை தெரிவித்திருந்த பொதுமக்கள் ஒரிரு நாட்களிலேயே விரைவாக சீரமைப்பு பணிகள் மேற்கொண்டதற்காக துணை முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.